செ.வெ.எண்.79 நாள்: 23.06.2021

# தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் ரோட்டில் அமைந்துள்ள வேளாண்மைத்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் திரவ உயிர் உற்பத்தியை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப, அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்து நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

---

தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் ரோட்டில் அமைந்துள்ள வேளாண்மைத்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் திரவ உயிர் உற்பத்தியை துவக்கி வைக்கும் நிகழ்ச்சி இன்று (23.06.2021) நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப, அவர்கள் கலந்துகொண்டு குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்து நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்ததாவது:

தூத்துக்குடி மாவட்டத்தில் தற்போதுள்ள சூழ்நிலையில் இராசயன உரங்களின் பயன்பாடு அதிகரித்து வருவதால் மண்ணின் வளம் பாதிக்கப்படும் சூழ்நிலை உள்ளது.இதனைத் தவிர்த்திட விவசாயிகள் தொடர்ந்து உயிர் உரங்களைப் பயன்படுத்தி மண்ணின் வளத்தை நலமாக்கினால்தான் நஞ்சில்லாத உணவினை வழங்கிட இயலும். எனவே உயிர் உரங்களை விவசாயிகள் பயன்படுத்தி மண்ணில் உள்ள நுண்ணியிரிகளின் எண்ணிக்கையை அதிகரித்து மகசூலுடன் மண்வளம் பாதுகாத்திட வேண்டும்.

தூத்துக்குடி மாவட்டத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் 2009-10 ன் கீழ் திட உயிர் உர உற்பத்தி மையம் அமைக்கப்பட்டு கடந்த பத்து ஆண்டுகளாக் திட உயிர் உரம் உற்பத்தி செய்யப்பட்டு தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு அனுப்பப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 2020-21ம் ஆண்டு தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் மற்றும் நீடித்த நிலையான வேளாண்மை இயக்க திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் திட உயிர் உர உற்பத்தி மையத்தினை திரவ உயிர் உர உற்பத்தி மையமாக மாற்றம் செய்யும் பொருட்டு உயர் தொழில்நுட்பம் வாய்ந்த இணை ஓட்ட வடிப்பான், தானியங்கி கொள்கலன் அடைப்பானஆகிய இயந்திரங்கள் 2020-21ம் ஆண்டில் கொள்முதல் செய்யப்பட்டு 2021-22ம் ஆண்டில் திரவ உயிர் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது.

திரவ உயிர் உர உற்பத்தி இலக்கு 50000லிட்டராக நிர்ணயம் செய்யப்பட்டு திரவ உயிர் உரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு தூத்துக்குடி-35700லிட்டர், விருதுநகர்-

10000 லிட்டர், கன்னியாகுமரி-4300 லிட்டர் என்ற அளவில் அம்மாவட்டங்களில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு அனுப்பப்படவுள்ளது. மேலும் திட உயிர் உர உற்பத்தி இலக்கு -94.51 மெ.டன் நிர்ணயிக்கப்பட்டு தூத்துக்குடி, விருதுநகர், திருநெல்வேலி, தென்காசி மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு அனுப்பப்படவுள்ளது என தெரிவித்தார்.

தொடர்ந்து 2020-21ம் ஆண்டு சிறந்த விவசாயி திரு.பட்டுமுருகேசன் அவர்களுக்கு வேளாண்மை துறையின் மூலம் ரூ.10000 அவர்களின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டதற்கான ஆணையும், 2020-21ம் ஆண்டு உழவர் நண்பர் மதிப்பூதியம் ரூ.6000 திரு.கருப்பசாமி அவர்களின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டதற்கான ஆணையும் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப, அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை இணை இயக்குநர் திரு. S.I.முகைதீன் , வேளாண்மை துணை இயக்குநர்(ம.தி) திருமதி.T.தமிழ்மலர், வேளாண்மை துணை இயக்குநர் (மா.தி) திரு. C.பழனிவேலாயுதம், வேளாண்மை துணை இயக்குநர் (உ.ப.நி) திரு.K.ஜெயசெல்வின் இன்பராஜ்,வேளாண்மை துணை இயக்குநர் (வே.வ) திருமதி.V.சாந்திராணி வேளாண்மை உதவி இயக்குநர்(வி.சா) திரு.S.அசோகன்,வேளாண்மை உதவி இயக்குநர்(த.த.க) திரு. S.கண்ணன் வேளாண்மை உதவி இயக்குநர்(தூத்துக்குடி) திருமதி. J.சந்திரகலா வேளான்மை அலுவலர் உயிர் உர உற்பத்தி மையம் தா.சகாயமேரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.